22.10.2024.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

SC 205 /2018

**அ.சா.25**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | | |
| த/பெ | சேகர் | மதம் | |
| கிராமம் | வளவனுர் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 39 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கார் ஓட்டுனராக இருந்து வருகிறேன். கடந்த 2014 ம் வருடம் விழுப்புரம் செழியன் என்பவரின் காரின் ஓட்டுனராக பணிசெய்தேன். அந்த காரை விழுப்புரம் இரயில்வே ஸ்டேஷன் பழைய டிக்கெட் கவுண்டர் எதிரில் நிறுத்தி வைப்பேன். அருகில் இருப்பு பாதை காவல் நிலையம் உள்ளதா என்றால் உள்ளது. என்றாவது காவல் நிலையத்தில் ஏதாவது அசரீதமான நிகழ்ச்சியோ, சத்தமோ இருந்ததா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் எதையும் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**கடந்த** 06.05.2014 ம் தேதி இரவு 11.00 மணியளவில் இருப்புப்பாதை காவல் நிலையம் அருகே என் காரில் உட்கார்ந்திருந்தேன் என்றும்,

அப்போது என்னை அடிக்காதீங்க, விட்டுவிடுங்கள் என்னால் வலி தாங்க முடியவில்லை என ஒரு ஆண் நபர் அலறும் சத்தம் கேட்டது என்றும், நான் பயந்துக்கொண்டு அங்கு சென்று பார்க்கவில்லை என்றும், பிறகு மறுநாள் 07.05.2014 ம் ஆண்டு மதியம் நான் பணிக்கு வந்தபோது இருப்புப்பாதை காவல் நிலையம் பரபரப்பாக காணப்பட்டது என்றும், அங்கு இருந்த சக ஓட்டுனர்களை விசாரித்தேன் என்றும், அவர்கள் என்னிடம் நேற்று விசாரணைக்காக அழைத்து வந்த ஒரு நபரை பயங்கரமாக அடித்துள்ளார்கள் என்றும், உடல்நலம் சரியில்லாமல் போக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும் வழியில் அவர் இறந்து விட்டதாக என்னிடம் தெரிவித்தார்கள் என்றும், பிறகுதான் நேற்று இரவு அடிப்பட்ட அந்த ஆள்தான் இறந்திருக்கக்கூடும் என்று விழுப்புரம் சி.பி.சி.ஐ.டி மற்றும் வேலூர் சி.பி.சி.ஐ.டி ஆய்வாளர்கள் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறு விசாரணை

இல்லை